2254

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2016

தரம் : 06

## செயல்முறைத் தொழில் நுட்பம்

நேரம் : 1.30 மணித்தியாலம்

பெயர் / சுட்டெண் : ..........................................................

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழக் கோடிடுக.**


01. வெளிப்புறச்சுற்றாடலை செழிப்பானதாகவும், கவரக்கூடியதாகவும் அலங்காரத்தை அதிகரிக்க எதனைச் செய்யலாம்?
1) கொடிகளை நாட்டல் 2) தொங்கும் தாவரங்களை நாட்டல்
3) குட்டையான தாவரங்களை நாட்டல் 4) மேற்கூறிய யாவும் செய்தல்

02. சாடியில் பயிர் வளர்க்கும் போது அச் சாடியின் அடிப்பகுதியில் இடப்படும் பொருட்கள் எது?
1) மேல்மண் 2) மாட்டெரு
3) உடைந்ந ஓட்டுத்துண்டு 4) உக்கிய பசளை

03. இயற்கையாக உள்ளவற்றை மனிதச் செயற்பாடுகளாக மாற்றும் செயற்பாடு அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
1) கட்டிடம் 2) வாகனங்கள்
3) பெருந்தெருக்கள் 4) நெடுந்தெருக்கள்

04. சமயலறையின் பணிகளில் அடங்காத விடயம் பின்வருவனவற்றுள் எது?
1) கொள்வனவு செய்தல் 2) ஆரோக்கியமான பாதுகாப்பான உணவு
3) உணவு சமைத்தல், பரிமாறல் 4) சரியான முறையில் தயாரித்தல்

05. உணவு சமைக்கும் முறையின் இயல்புகள்
1) இயற்கை ஒளியில் அடுப்பு இருத்தல்
2) சமைத்த உணவு பாத்திரம் வைப்பதற்குரிய இடம்
3) சூடான பாத்திரம் பிடிக்க துடை துண்டுகளிருத்தல்
4) மேற்கூறிய யாவும்

06. 

இக் குறியீடு சமயலறையில் குறிக்கும் பகுதி எது?
1) சமையலறையின் சுவர் 2) சமையலறையின் கதவு
3) உணவு சமைக்கும் அலகு 4) சமையலறையின் யன்னல்

07. சுட்டுத்துண்டொன்றை தயார் செய்ய பொருத்தமற்ற விடயம் எது?
1) நிறப்போனையால் வரைதல் 2) பென்சிலால் வரைதல்
3) பொருத்தமான படங்களை வரைதல் 4) அச்சிட்ட படங்கள் ஒட்டுதல்

08. Technical Drawing எனும் ஆங்கிலப் பதத்தின் தமிழ் அர்த்தம் எது?
1) தொழில் நுட்ப வரைதல் 2) கேத்திர கணித வரைதல்
3) அட்சர கணித வரைதல் 4) பொறிமுறை வரைதல்



kalvi.lk

2254

09. கேக் பொதி செய்யும் போது எல்லா அளவுகளும் என்ன அலகில் பயன்படுத்தப்படும்?
1) மில்லி மீற்றர் 2) சென்ரி மீற்றர்
3) மீற்றர் 4) எதுவும் இல்லை

10. பின்வருவனவற்றுள் சேமிப்பு பழக்கத்தினுள் வராத ஒன்று எது?
1) பிடி அரிசிப் பாவனை 2) காசோலை
3) உண்டியல் 4) சேமிப்புப் புத்தகம்

11. உலகில் வேகமாக வளர்ந்து வரும் ஒரு தொழில்நுட்ப முறை எது?
1) முறைசார் வடிவங்களை உருவாக்கல் 2) முறைசாரா வடிவங்களை உருவாக்கல்
3) புதிய வடிவங்களை உருவாக்கல் 4) மேற் கூறியஎதுவுமில்லை

12. துணியில் அச்சிடுவதற்கு இலகுவாக பெறக்கூடிய வழி எது?
1) A-4 தாள் 2) A-3 தாள்
3) டிமை தாள் 4) எக்ஸ்ரே கடதாசி

13. வித்துக்களை நாற்றுமேடையில் இட்டு பின் நாற்றுக்களாக நடக்கூடிய பயிர்கள் எவை?
1) கத்தரி 2) தக்காளி
3) மிளகாய் 4) மேற்கூறிய யாவும்

14. புதிய மீனின் இயல்பாகக் கருதப்படும் இயல்புகள் எவை?
1) பிரகாசமான கண்கள் 2) உறுதியான செதில்கள்
3) சிவப்பு நிறமான பூக்கள் 4) மேற்கூறிய யாவும்

15. உயிர் வாழ்வதற்கு ஒருவருக்குஅவசியமாக நிறைவேற்றிக் கொள்ளவேண்டியவை எவ்வாறு குறிப்பிடப்படும்?
1) தேவைகள் 2) விருப்பங்கள்
3) கனவுகள் 4) நினைவுகள்

16. பின்வருவனவற்றுள் தொடர்பாடலுக்குள் அடங்காதது எது?
1) தொலை பேசி 2) குடை
3) இணையம் 4) பத்திரிகை

17. முறைசார் வடிவம் அல்லாத ஒன்றைக் குறிப்பிடுக.
1) முக்கோணம் 2) சதுரம்
3) இலை 4) வட்டம்

18. இலச்சினை மூலம் தனித்துவத்தை காட்டமுடியும் அதற்கு உதாரணம் தருக.
1) நாட்டுக் கொடி 2) நிறுவனங்கள்
3) திணைக்களங்கள் 4) மேற்கூறிய யாவும்

19. பூச்சிகளை உண்ணாத பிராணி பின்வருவனவற்றுள் எது?
1) ஓணான் 2) தவளை
3) கிளி 4) வெட்டுக் கிளி

20. தகடு வெட்டும் கத்தரியின் இயல்பு அல்லாதது எது?
1) காபன் உருக்கால் ஆனது 2) மெல்லிய உலோகத் தகடு வெட்டலாம்
3) முனை கனமானதும் அகலமானதும் 4) அலுமினியத்தால் ஆனது

(20 x 1 = 20 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை அளிக்குக.**

01) 1. செயல்முறைப் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை ஒன்றைக் குறிப்பிடுக.
2. இக் கணிப்பீட்டினை மேற்கொண்ட பாடப்பிரிவு எது?
3. இக் கணிப்பீட்டிற்காக பயன்படுத்திய கருவி, உபகரணங்கள் எவை?
4. இதனால் உமக்கு ஏற்பட்ட இடர்பாடுகள் இருப்பின் குறிப்பிடுக.
5. கணிப்பீட்டு வகைகள் நான்கைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

02) 1. அலங்கார இலைத் தாவரங்கள் இரண்டும், அலங்கார பூத் தாவரங்கள் இரண்டும் தருக.
2. தாவரங்கள் சிறப்பாக வளரத் தேவையான காரணிகள் எவை?
3. திட்டமிட்டு அமைக்கப்பட்ட சமையலறையின் நன்மைகள் இரண்டு தருக.
4. சமையலறையின் மூன்று முக்கிய அலகுகளும் எவை?
5. கணனிக்குள் சென்று சுட்டுத்துண்டு தயாரிக்கும் போது எந்த மென்பொருளினுள் சென்று செயற்பாட்டில் ஈடுபட வேண்டும்?

(10 புள்ளிகள்)

03) 1. சேமிப்பதனால் ஏற்படும் நன்மைகள் எவை?
2. வீண்விரயத்தை தடுக்கும் இரண்டு வழிகள் எவை?
3. ஓய்வு நேரத்தை சுயதொழிலாக்கி வருமானம் பெறும் போது வேறு பல அனுகூலங்களும் கிடைக்கும். அதில் 4 ஐக் குறிப்பிடுக.
4. மிக இலகுவாக பணம்மீட்கக் கூடிய முயற்சிகள் 2 தருக.
5. முதலீடு செய்வதற்கு ஏற்ற நிதிநிறுவனங்கள் 4 தருக.

(10 புள்ளிகள்)

04) 1. எளிய வடிவங்களாலான உருக்கள், வர்ண ஆக்கங்கள் மூலம் பொருள் ஒன்றின் அழகை, கவர்ச்சியைக் கூட்ட முடியும். அத்தகைய நான்கு பொருட்களைக் குறிப்பிடுக.
2. பல்வேறு உருக்களை கூட்டாக வரைந்து அக் கூட்டத்தின் இடையில் சிறு உருக்களை வரைந்து வெட்டுவதால் பெறப்படும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
3. அச்சுப் பதித்தல்(டென்சில்) முறை எத்தகைய உருவாக்கத்தின் போது பாவிக்கப்படுகின்றது?
4. நீங்கள் பாவிக்கும் உடைகளில் சாதாரண வடிவங்களை அல்லது உருக்களை எவ் வகைகளில் சேர்த்து மேலும் அலங்கரிக்கலாம்?
5. 'ஸ்பொஞ்ச்' என்ற ஆங்கில பதத்தின் தமிழ் அர்த்தம் யாது?

05) 1. நாற்றுமேடை அல்லது உயர் பாத்தி ஒன்றின் ஆகக் கூடிய அகலம் யாது?
2. புதிய உணவின் தரப் பண்புகள் எவை?
3. பற்றாசுக் கோல் (பௌத்) இன் முனை எவ் உலோகத்தால் ஆனது?
4. சேவைகளாகக் கருதப்படக்கூடிய நான்கு தொழில்கள் தருக?
5. முறைசார் வடிவங்கள் நான்கு தருக?

(10 புள்ளிகள்)



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**